| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>ஜோதி | OS.253/2019 | 19.12.2022 |

**PW 1 – முதல் விசாரணை தொடர்ச்சி**

| வ.எண். | தேதி | ஆவணங்களின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 02.02.1999 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | – | வாதி பெயரில் ஏற்பட்ட கூட்டு பட்டா | கணினி நகல் |
| வா.சா.ஆ.3 | – | பட்டா மாறுதல் தொடர்பாக வாதி கொடுத்த மனுவிற்கான ஒப்புகை சீட்டு | கணினி நகல் |
| வா.சா.ஆ.4 | 06.02.2019 | அ.வ.எண்.57/17 ன் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 06.02.2019 | அ.வ.எண்.57/17 ன் தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 20.09.2019 | மனு ரசீது | அசல் |
| வா.சா.ஆ.7 | – | வாதியால் அமைக்கப்பட்ட கம்பி வேலி குறித்த புகைப்படம் மற்றும் குறுந்தகடு | அசல் |
| வா.சா.ஆ.8 | – | பிரதிவாதிகளால் கம்பி வேலி பிடுங்கி எறியப்பட்ட புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு | அசல் |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>PW 1 – குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு சொத்திற்காக இதே பிரதிவாதிகள் மீது அ.வ.எண்.57/2017 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், விளம்புகை பரிகாரமும் கோரி பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கில் 06.02.2019–ம் தேதி தீர்ப்பில், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு வழங்கப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பை எதிர்த்து, மேல்முறையீடு செய்யவில்லை. மேற்சொன்ன அ.வ.57/2017 என்ற வழக்கின் தீர்ப்பை எதிர்த்து, பிரதிவாதிகள் மேல்முறையீடு தாக்கல் செய்து A.S.28/2019 ஆக மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் தெரியவில்லை. அந்த மேல்முறையீட்டு வழக்கானது, 20.12.2022 அன்று விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும், அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் வைத்து ஆஜராகியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. மேல்முறையீட்டு வழக்கை பற்றி, இந்த அசல் வழக்கில் சொல்லாமல் மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்பதால் தான், நான் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு வழங்கப்படாமல், அ.வ.எண்.57/2017 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் எனக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யாமல், இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க 09.01.2023 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)